தினமணி



# பி.எஸ்.என்.எல். வருவாயை 25 சதம் உயர்த்த இலக்கு




தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அகில இந்திய பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்கத்தின் மாநிலச் செயற்குழு, சிறப்பு கருத்தரங்கக் கூட்டத்தில் பேசுகிறார் தமிழ்நாடு வட்ட முதன்மைப் பொது மேலாளர் எம். அஷ்ரப் கான்.

தஞ்சாவூர், ஆக. 19: தமிழகத்தில் நிகழாண்டில் பி.எஸ்.என்.எல். வருவாயை 25 சதம் உயர்த்த மத்திய தொலைத்தொடர்பு அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது என்றார் தமிழ்நாடு வட்ட முதன்மைப் பொது மேலாளர் எம். அஷ்ரப்கான்.

தஞ்சாவூரில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற அகில இந்திய பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்கத்தின் மாநிலச் செயற்குழு மற்றும் சிறப்பு கருத்தரங்கக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

தமிழ்நாடு பி.எஸ்.என்.எல். வட்டத்தில் கடந்த 3 மாதங்களில் 4 சதம் வருவாய் அதிகரித்துள்ளது. பி.எஸ்.என்.எல்.-லில் தற்போது பணியிலுள்ள ஊழியர்களுக்கும், ஓய்வு பெற்ற ஊழியர்களுக்கும் [illegible] விற்பனை முகவர் அங்கீகாரம் அளித்து, அவர்கள் மூலம் [illegible] விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. ஊழியர்கள் முகவர் அந்தஸ்து பெறுவதற்கான வைப்புத் தொகையும் குறைக்கப்பட்டுள்ளது. பி.எஸ்.என்.எல். ஊழியர்களுக்கே இந்த முகவர் வாய்ப்பை அளிப்பதால், அவர்கள் ஈடுபாட்டுடன் பணியாற்றி வருவாய் அதிகரிக்க உதவுவார்கள்.

முகவர் வாய்ப்பு பெற்றவர்கள் தங்களுக்குக் கீழ் ஒருவரை பணியமர்த்தி பி.எஸ்.என்.எல். தயாரிப்புகளைச் சந்தைப்படுத்தலாம். இதன் மூலம், பி.எஸ்.என்.எல். தயாரிப்புகளுக்கு உலகளாவிய பெருமை கிடைப்பதுடன், வருவாயும் அதிகரிக்கும் என்றார் அஷ்ரப் கான்.

கூட்டத்திற்கு பி.எஸ்.என்.எல். முதன்மை கணக்கு அதிகாரி வி. உஷா (மதுரை) தலைமை வகித்தார். துணைப் பொது மேலாளர் எஸ். ஜெயச்சந்திரன் (காரைக்குடி) கூட்டத்தைத் தொடங்கி வைத்தார்.

தஞ்சாவூர் தொலைத்தொடர்பு மாவட்டப் பொது மேலாளர் ஜெ.வி. ராஜா ரெட்டி, சமூக ஆர்வலர் பேராசிரியர் அ. மார்க்ஸ், ஏ.ஐ.டி.யு.சி. மாவட்டச் செயலர் சி. சந்திரகுமார், பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க தமிழ்நாடு வட்டச் செயலர் கே. ராஜசேகரன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்: தேசிய அளவில் அகலக்கற்றை வழங்கும் திட்டப் பணிகளை பி.எஸ்.என்.எல். மூலமாக நிறைவேற்ற மத்திய அரசு அனுமதிக்க வேண்டும். மத்திய அரசின் சமூகப் பொருளாதாரத் திட்டங்களை மக்களுக்கு கொண்டு செல்வது பொதுத் துறை நிறுவனங்கள்தான். வருவாய் இழப்பு ஏற்படும்போதெல்லாம் கிராமப்புற சேவைகளைத் தடையின்றி பி.எஸ்.என்.எல். வழங்கி வந்துள்ளது. எனவே, அகலக்கற்றை பணிகளை பி.எஸ்.என்.எல்.-லிடமே ஒப்படைக்க வேண்டும்.

கடந்த 2004 ஆம் ஆண்டில் செல்போன் சேவையில் பி.எஸ்.என்.எல். நுழைந்த பிறகுதான் கட்டணங்கள் குறைந்துள்ளன. ஆனால், மத்திய அரசின் தாராளமயமாக்கல் கொள்கைகள் தனியார், பன்னாட்டு நிறுவனங்களுக்குச் சாதகமாக உள்ளன. தேசிய தொலைத்தொடர்பு ஆணையம் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாகச் செயல்படுவதை நிறுத்த வேண்டும்.

தொழில்நுட்பச் சாதனங்களை உரிய நேரத்தில் பயன்படுத்த முடியவில்லை. டெண்டர் விடுமுறைகள் அமைச்சக நடைமுறைகளில் சிக்கியுள்ளன. பி.எஸ்.என்.எல்.-லின் வளர்ச்சிக்கும் விரிவாக்கத்திற்கும் தடையாக உள்ள முட்டுக்கட்டைகளை அகற்ற மத்திய அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பன உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

முன்னதாக, சங்கத்தின் தஞ்சாவூர் மாவட்டச் செயலர் எஸ். தங்கமணி வரவேற்றார். மாவட்டத் தலைவர் என். ஜெயராமன் நன்றி கூறினார்.

# BSNL, Tamil Nadu Circle, pockets a revenue of Rs.146 crore this year

Special Correspondent

**THANJAVUR:** Bharath Sanchar Nigam Ltd (BSNL) Tamil Nadu Circle, has earned a revenue of Rs.146 crore as of July end this year (2011), said Mohamed Ashraf Khan, Chief General Manager, Telecom, Tamil Nadu circle, here on Friday.

At the third circle executive committee meeting of the All India BSNL Officers' Association (AIBSNLOA), Mr.Khan said that the revenue as of July end last year (2010) was Rs. 141 crore. Out of the total revenue of Rs 146 crore, revenue from Consumer Fixed Assets such as landline stood at Rs.77 crore, from consumer mobility (cellular phones) Rs 64 crore and business enterprises Rs.5 crore.

Commenting that the Union Telecom Minister Kapil Sibal has set a target of 25 per cent increase in revenue by this year end so that the company may make profit, Mr.Khan said that this 'turn around' strategy of the Minister is possible only if the staff in each circle and each Secondary Switching Area (SSA) within the circle focus on increasing revenue. Of the numerous ways available to achieve this goal, one is selling recharge coupons by employees and their families themselves. Junior Telecom Officers can purchase coupons and sell them. Broadband kiosks can be opened in each exchange particularly in rural areas. The revenue from these kiosks is Rs 20,000 per quarter and in a year revenue of Rs 80,000 can be made from each kiosk. Tamil Nadu Telecom circle has planned to lay down cables covering a distance of 300 km. While the company has tied up with many franchisees for supplying modems if a consumer is ready to buy his own modem, the move would be welcome, he said.




**CLEAR CUT:** *Mohamed Ashraf Khan, Chief General Manager, Telecom, Tamil Nadu Circle, speaking at the meeting of All India BSNL Officers Association in Thanjavur on Friday.* –PHOTO: M.SRINATH

The Circle Executive Committee meeting of the Officers Association has urged the Central government and Department of Telecommunications to complete the transfer of assets of BSNL without further delay. In this connection, a Memorandum of Understanding dated September 30, 2000, was signed between the Government of India and the BSNL, when it was formed that all assets and liabilities in respect of business carried on by Department of Telecommunication Services will be transferred. The meeting also urged the BSNL to change the procedures for procurement of equipment, with required safeguards against malpractice so that equipments can be processed without cumbersome processes.

K.Rajasekaran, Circle secretary of the association said that the strength of BSNL was broadband and focus should be on providing more broadband connections. J.V.Raja Reddy, General Manager, Thanjavur SSA, BSNL, A.Marx, Social Activist, C.Chandrakumar, Trade Union Leader V.Usha, Circle Working Committee (CWC) member also spoke.

Later the CGM spoke at a state-level seminar organised by BSNL Employees Union in connection with Customer Delight Year announced by BSNL. P.Abhimanyu, All India General Secretary of the Association, S.Chellappa, State Secretary, R.Thirunavukarasu, General Manager, (Administration and HR), BSNL, Chennai, participated in the meeting. K.Marimuthu, state president of the Association presided.

The association appealed to the government to change what it alleged the government's anti-public sector policies to save BSNL from private companies. Government should make it mandatory for its departments and state government departments to get only BSNL telecommunication services.

THE HINDU




தஞ்சை பாலாஜி நகர் பி.எஸ்.என்.எல். அலுவலகத்தில் நடைபெற்ற பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் கூட்டத்தில் தலைமை பொது மேலாளர் அஷ்ரப்கான் பேசிய போது எடுத்த படம். அருகில் பொது மேலாளர் ராஜாரெட்டி உள்ளார்.

### தேசிய அலைக்கற்றை வழங்கும் திட்டத்தை

# பி.எஸ்.என்.எல். நிறுவனத்திடம் மத்திய அரசு வழங்க வேண்டும்

## பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தல்

தஞ்சாவூர், ஆக.20–

தேசிய அலைக்கற்றை வழங்கும் திட்டத்தை பி.எஸ்.என்.எல். நிர்வாகத்திடம் மத்திய அரசு வழங்க வேண்டும் என்று பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.

### கருத்தரங்கம்

அகில இந்திய பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்கத்தின் சார்பில் சிறப்பு கருத்தரங்கம் தஞ்சையில் நடைபெற்றது. கருத்தரங்கிற்கு மத்தியக்குழு உறுப்பினர் உஷா தலைமைதாங்கினார். தஞ்சை மாவட்ட செயலாளர் தங்கமணி வரவேற்றார். மத்தியக்குழு உறுப்பினர் ஜெயசந்திரன் தொடக்க உரை ஆற்றினார்.

கூட்டத்தில் தொலைத்தொடர்பு துறை தமிழ்நாடு வட்ட முதன்மை பொதுமேலாளர் அஷ்ரபகான், தஞ்சை பி.எஸ்.என்.எல். பொது மேலாளர் ராஜாரெட்டி, பேராசிரியர் மார்க்ஸ், வக்கீல் சந்திரகுமார், அதிகாரிகள் சங்க மாநில செயலாளர் ராஜசேகரன் ஆகியோர் கலந்து கொண்டு பேசினர்.

முடிவில் தஞ்சை மாவட்ட தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.

### செயற்குழு கூட்டம்

பின்னர் பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு:-

மத்திய அரசு தேசிய அலைக்கற்றை (பிராட் பேண்ட் நெட்வொர்க்) வழங்கும் திட்டத்தை அறிவித்துள்ளது. இந்த திட்டத்தை நிறைவேற்றும் பணியை பி.எஸ்.என்.எல்.லுக்கு வழங்க மத்திய அரசை வலியுறுத்துவது.

செல்போன் சேவையை பி.எஸ்.என்.எல். நிறுவனம் தொடங்கி பின்னர் தான் தனியார் நிறுவனங்கள் கட்டணங்களை குறைத்தன. செல்போன் சந்தையை கைப்பற்ற இன்று தனியார் நிறுவனங்களுக்குள் கடும் போட்டி நிலவுகிறது. சந்தையை தக்க வைக்கவும், கைப்பற்றவும் கட்டணங்கள் மேலும் குறைக்கப்படுகின்றன. தற்போது மத்திய அரசு அமல்படுத்தி வரும் தாராளமயக்கொள்கைகள் தனியார், பன்னாட்டு நிறுவனங்களுக்கு அதிக ஆதாயத்தை வழங்கிறது. தேசிய தொலைதொடர்பு ஆணையம் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படுகிறது.

### நடவடிக்கை

பி.எஸ்.என்.எல். வளர்ச்சி, விரிவாக்கம் ஏராளமான தடைகளால் முடக்கிவைக்கப்பட்டு உள்ளது. தேவையான தொழில்நுட்ப சாதனங்களை வாங்கி உரிய நேரத்தில் பயன்படுத்த இயலவில்லை. டெண்டர் விதிமுறைகள், அமைச்சக நடைமுறைகளில் சிக்குண்டு, பி.எஸ்.என்.எல். வளர்ச்சியும், வர்த்தகமும் பெரிதும் பாதிப்புக்குள்ளாகி வருகிறது. எனவே மத்திய அரசு பி.எஸ்.என்.எல். வளர்ச்சி, விரிவாக்கத்திற்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.

பி.எஸ்.என்.எல். சொத்துக்களை தொலைத்தொடர்பு துறையுடனே மாற்றித்தர மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் ஆகிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.



### தஞ்சை டி.இ.எ

## சமச்சீர் பாடப்புத்தக

தஞ்சாவூர், ஆக.20–

தஞ்சாவூர் டி.இ.எல்.சி. பள்ளியில் சுதந்திர தினவிழா, இலவச சீருடை வழங்கும் விழா மற்றும் சமச்சீர் பாடப்புத்தகங்கள் வழங்கும் விழா ஆகிய முப்பெரும் விழா நடைபெற்றது. விழாவிற்கு பள்ளி

# தஞ்சை கல

## மர்ம ஆசாமிகள

தஞ்சாவூர், ஆக.20–

தஞ்சை கலைட்டில் பணத்தை கிராம சென்ற

செல்லப்பன்பேட்டை அரசு உயர்நிலைப்பள்ளி

கொல்கத்தா, ஐதராபாத், அந்தமான்,
REGD. N




ஓய்வு. பிஎஸ்என்எல் ஊழியருக்கு

# நேரடி விற்பனை முகவர் பணி

## தலைமை பொதுமேலாளர் பேச்சு

தஞ்சை, ஆக.20: பிஎஸ்என்எல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும், ஓய்வு பெற்ற ஊழியர்களும் பிஎஸ்என்எல் தயாரிப்புக்கு நேரடி விற்பனை முகவர் பணி வழங்கப்பட உள்ளது என தமிழ்நாடு வட்ட தலைமை பொது மேலாளர் அஷ்ரப் கான் பேசினார்.

தஞ்சையில் அகில இந்திய பிஎஸ்என்எல் அலுவலர்கள் சங்க 6வது வட்ட செயற்குழு கூட்டம் நேற்று நடைபெற்றது. தஞ்சை மாவட்ட செயலாளர் தங்கமணி வரவேற்றார். தலைமை கணக்கு அலுவலர் உஷா தலைமையுரையாற்றினார். உதவி பொது மேலாளர் ஜெயசந்திரன் தொடக்க உரையாற்றினார். இதில் பிஎஸ்என்எல் தமிழ்நாடு வட்ட தலைமை பொது மேலாளர் அஷ்ரப் கான் பேசுகையில், தமிழ்நாடு பிஎஸ்என்எல் வட்டத்தில் நிகழாண்டின் வருமானத்தை 25 சதவீதமாக அதிகரிக்க மத்திய தொலை தொடர்பு அமைச்சகம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அடுத்த 3 மாதங்களில் 4 சதவீதம் வருவாய் அதிகரிக்கப்பட்டுள்ளது.

பிஎஸ்என்எல் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர்களும், ஓய்வு பெற்ற ஊழியர்களும் பிஎஸ்என்எல் தயாரிப்புக்கு நேரடி விற்பனை முகவர் பணி வழங்கப்பட உள்ளது. அதற்கான வைப்பு தொகை இவர்களுக்கு குறைவாக பெறப்படும். பிஎஸ்என்எல் தயாரிப்புகள் பற்றி முழுமையாக அதன் ஊழியர்கள் நன்கு அறிந்திருப்பார்கள். எனவே தான் அவர்களுக்கு நேரடி முகவர் வாய்ப்பு வழங்கப்படுகிறது. இதனால் சந்தைப்படுத்துதல் மூலம் அதிக வருவாய் ஈட்ட முடியும் என்றார்.

பிராட்பேண்ட் அமைக்கும் பணியை தனியாருக்கு கொடுக்க கூடாது. அரசின் சமுக பொருளாதார திட்டங்களை பொதுத்துறை நிறுவனங்கள் மக்களுக்கு கொண்டு செல்கிறது. வருவாய் இழப்பு ஏற்படும் நேரங்களில் கூட கிராம சேவைகளை பிஎஸ்என்எல் நிறுத்தவில்லை. அதனால் பிராட்பேண்ட் அமைக்கும் பணியை பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு கொடுக்க வேண்டும். மத்திய அரசின் தொலைத்தொடர்பு கொள்கை தனியாருக்கும், பன்னாட்டு நிறுவனங்களுக்கும் சாதகமாக உள்ளதை மாற்றி அமைக்க வேண்டும். புதிதாக வரும் தொலை தொடர்பு சாதனங்களை உடனுக்குடன் செயல்படுத்தும் நடைமுறையை கொண்டு வர வேண்டும் என தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கூட்டத்தில் பி.எஸ்.என்.எல். தஞ்சை தொலை தொடர்பு பொது மேலாளர் ராஜா ரெட்டி, சமூக ஆர்வலர் மார்க்ஸ், ஏ.ஐ.டி.யூ.சி. மாநில துணை தலைவர் சந்திரகுமார், அகில இந்திய பிஎஸ்என்எல் அலுவலர்கள் சங்க மாநில செயலாளர் ராஜசேகரன் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.

தஞ்சை மாவட்ட தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.

திருச்சி-காவேரி A/c dts & மாரீஸ்ராக் A/c dts, தஞ்சை-
குடந்தை-பரணிகா A/c dts மாயவரம்-பியர்லெஸ் dts, பட்
புதுகை-RKP A/c dts, கரூர்-அமுதா dts, திருவாரூர்-நடே

IANAGEMENT (PGDHM) | 2012 [As per UGC Minimum Standards and Procedure for Award of Ph.D Degree

brought up regarding the | electricity scarcity, the farm- | dlemen. He also requested | ed.

# DoT Targets 25% Rise in BSNL Revenue from Tamil Nadu Circle

**Express News Service**

**Thanjavur:** Union Ministry of Telecommunications has targeted raising the revenue by 25 per cent for the TN telecom circle during the current year, according to Mohammed Ashraf Khan, Chief General Manager of the circle.

He was addressing the third circle executive committee (CEC) meeting of the All India BSNL Officers Association and special conference here on Friday.

Khan said the circle has achieved a four per cent rise in revenue in the last three months and to reach the target, the Department of Telecom (DoT) planned to appoint Direct Selling Agents (DSAs). The spouse of the BSNL employees and the retired employees could become DSAs and the deposit amount for them has been slashed, he said. The BSNL officers could buy recharge vouchers from ₹ 30,000 onwards. The DSAs can appoint persons to sell the vouchers, said Khan.

Meanwhile, the CEC urged the Government and the DOT to complete the transfer of all assets in favour of BSNL as per the MoU signed on September 30, 2000 between Centre and BSNL.

When apprehension was being expressed on the financial viability of BSNL, it would be prudent to complete the assets tranfer immediately to dispel it.

The DoT should rationalise the equipment procurement norms to plug mal practices. The Centre should immediately release funds to meet the loss of BSNL for its landline operations in uneconomic areas.

## CSC TO FUNCTION ON ALL DAYS

**Thanjavur:** Tamil Nadu State BSNL Employees Association has resolved to keep open the Customers Service Centres (CSC) throughout the year to boost sales of the BSNL products. The association expressed concern that the SIM card sale in first quarter was only at 1,82,886 against the targetof 5,22,750. It urged the employees to go for intensive marketing to reach the target. Big corporates should be approached for CUG connections. The association president K Marimuthu said for the current year [illegible] the sales target of SIM Cards has been fixed at 20,91,000 and urged to increase the sale of Desk Top M[illegible]. The meeting urged the employees to attend the customers complaints immediately to increase the increase BSNL customer base. ENS

araikal GH

Farmers Seek Check Dam

## பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க கூட்டம்

தஞ்சாவூர், ஆக. 20-

அகில இந்திய பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க மாநில செயற்குழு கூட்டம் தஞ்சை பாலாஜி நகரில் உள்ள பிஎஸ்என்எல் அலுவலக வளாகத்தில் நடந்தது.

மத்திய பணிக்குழு உறுப்பினர் உஷா தலைமை வகித்தார். மாவட்ட செயலாளர் தங்கமணி வரவேற்றார். மத்திய பணிக்குழு உறுப்பினர் ஜெயசந்திரன் தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு வட்ட முதன்மை பொது மேலாளர் அஷ்ரப்ஹூான், தஞ்சை தொலைத் தொடர்பு மாவட்ட பொது மேலாளர் ராஜாரெட்டி, மனித உரிமை அமைப்பு மாநிலத் தலைவர் மார்க்ஸ், ஏஐடியூசி தொழிற்சங்க மாவட்ட செயலாளர் சந்திரகுமார் ஆகியோர் பேசினர்.

தேசிய பிராட் பேண்ட் நெட்வொர்க் பணியை பிஎஸ்என்எல் நிறுவனத்துக்கு வழங்க வேண்டும். தேசிய தொலைத் தொடர்பு ஆணையம் தனியார் நிறுவனங்களுக்கு ஆதரவாக செயல்படுவதை கைவிட்டு பி.எஸ்.என்.எல். நிறுவன வளர்ச்சிக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டும் உட்பட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

மாவட்ட தலைவர் ஜெயராமன் நன்றி கூறினார்.




தஞ்சையில் நடந்த பி.எஸ்.என்.எல். அதிகாரிகள் சங்க மாநில செயற்குழு கூட்டத்தில் தமிழ்நாடு வட்ட முதன்மை பொது மேலாளர் அஷ்ரப்ஹூான் பேசுகிறார்.

## பாரத் கல்லூரியில் பசுமை உலக கருத்தரங்கு

தஞ்சாவூர், ஆக. 20-

உலக பசுமைப்பட... பியல் துறை மாணவர்கள் என்.எஸ்.எஸ். மாணவர்க...

## சுற்றுலா பயணிகளுக்கான ...